முருகப்பெருமான் துணை

**மகான் பெருமிழலைகுறும்ப நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.01.2022**, வியாழக்கிழமை

1. பாரப்பா கலியின் கொடுமை
   பலியாகும் மக்களின் அவலம்
   கூறப்பா கருமவினை ஆக
   குவலயத்தில் இந்த அவலம் போக்க
2. போக்கவே அவதரித்த அரங்கன்
   பெருமை கூறி துல்லிய ஆசி
   ஆக்கமுடன் பிலவ சிலைதிங்கள்
   அய்நான்கீர் திகதி குருவாரம்
   **(**பிலவ வருடம் மார்கழி மாதம் **22**ம் நாள், **06.01.2022** வியாழக்கிழமை**)**
3. வாரமதில் பெருமிழலைகுறும்ப நாயனாரும்
   வழங்குவேன் மக்கள் பாதுகாப்புவேண்டி
   கிருமியாக உருமாறி வருகின்ற
   கூறிடுவேன் பேரிடரை வெல்ல
4. வெல்லவே உயிர்பலி காணா
   விரைந்து உலகோர் மீள
   வல்லமைதரும் இயற்கை உணவும்
   வரமான சைவ நெறிவகையும்
5. வகையும் விரைந்து வந்து
   வரமாக சுயக் கட்டுப்பாடுகள்
   பகைமையிலா தயவுநிலைபட
   பசிபிணி விரட்டும் தருமசிந்தை
6. சிந்தைபட நடந்து நாளும்
   சித்தர்கள் நாம செப பூசை
   எந்தநாளும் விடாது செய்து
   இயன்ற தருமம் செய்து வர
7. வருவதுடன் உயிர்கொலை நீக்கி
   வள்ளல் காட்டும் நெறியை
   திருவருள் வழிகாட்டலாக ஏற்று
   தொடர்ந்து மக்கள் பின்பற்றி
8. பின்பற்றி பேருலகை காக்க
   பிரபஞ்ச மகா சக்தியாக வந்த
   துன்பம் போக்கும் அரங்கஞானி
   துறையூர் மண்ணை காப்புபூமியாக
9. ஆகவே கருதி வந்துமே
   அகிலத்தார் ஓங்கார குடிலில்
   மகான் அரங்கனிடம் தீட்சை
   மாதவ பலமாக ஏற்றுவர

10. வருகவே உலகோர்க்கு நலம்கூடி
வருகின்ற புதிய கிருமி வழி
பெருகா துன்பம் விலகி
பேருலகம் அமைதி காண்கும்
11. காண்கவே சர்வ பாதுகாப்பாய்
கலியின் கட்டங்கள் விலகும்
சண்முகனார் அருளும் வந்து
சர்வரோக நிவர்த்தியாக மாறும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–